## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

OS. No: 63/2007 19.08.2019 DW6

Name : மனோஜ் த/பெ. :ஜெ.பிரபாகரன்

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் B.E Mechanic பட்டப்படிப்பு படித்துள்ளேன். நான் ஆரம்ப கல்விகளை ஈரோட்டில் படித்தேன். அக்காலகட்டத்தில் நான், என் அப்பா, என் அம்மா அனைவரும் ஈரோட்டில் இருந்து வந்தோம். என் அப்பாதான் என்னை படித்து வந்தார், பாதுகாத்தார் என்றால் உண்மை. அவர்தான் எனக்கு இயற்கையான பாதுகாவலர் என்றால் உண்மை. இவ்வழக்கில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்து என் கொல்லுதாத்தா வழி வந்தது என்றால் உண்மை. என் தாத்தா, பாட்டி மற்றும் அப்பாவும் இறந்துவிட்டார்கள் என்றால் உண்மை. இவ்வழக்கில் என் அம்மா தரப்பினராக காண்பிக்கப்பட்டுள்ளார் என்றால் உண்மை. இவ்வழக்கு சொத்து தற்போது எனக்கும், என் அம்மாவிற்கும் வாரிசுபடி பாத்தியம் ஏற்பட்டுள்ளது. நான் இவ்வழக்கில் தனியாக ஒரு பதிலுரை போட்டுள்ளேனா என்றால் உண்மை. என் அப்பா ஏற்கனவே பதில் போட்டுள்ளார். நான் மைனராக இருக்கும்போது என் அப்பா எழுதிக்கொடுத்த Agreement செல்லாது என்று சொல்கிறேன். என் வழக்குபடி வாதியிடம் உள்ள சொத்தை எனக்கு திருப்பிக் கொடுக்கும்படி கேட்கிறேன் என்றால் ஆமாம். வாதி நொடிப்பு நிலை அடைந்தவர் என்று மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனுவில் பைசல் ஏற்பட்ட கடன்தாரர்களுக்கு பணத்தை கட்டினார் என்ற விவரம் எனக்கு தெரியாது. ராமசாமி என்பவருக்கு கட்ட வேண்டிய தொகையையும் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார். CRP(PD)No.4213/18 என்ற வழக்கில் CMP.No.23146/2018 ல் நாள்.20.12.2018 ம் தேதியன்று மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் சங்ககிரி நீதிமன்றத்தில் பிறப்பித்த உத்தரவுகளை Stay செய்து உத்தரவிட்ட விவரம் எனக்கு தெரியாது. மேற்படி சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் ராமசாமி என்பவருக்கு வாதி நீதிமன்ற வைப்பீடு வைத்துள்ளார் என்றால் சரிதான். அதனால் நான் தாக்கல் செய்துள்ள EXP36, 37 உத்தரவுகள் சென்னை உயர் நீதிமன்ற உத்தரவுப்படி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று சொன்னால் உண்மைதான். 01.06.2007 ம் தேதியன்று எனது வயது 12 ஆகும். EXA1 ல் உள்ள இரண்டாவது கையெழுத்து என் அப்பாவின் கையெழுத்து இல்லை. என் அப்பாவின் கையெழுத்து மாதிரி உள்ளது. மேற்படி ஆவணத்தில் என் அப்பாவின் ரேகை உள்ளது என்றால் பொய். மேற்படி ரேகை என் அப்பாவின் ரேகை இல்லை என்று சொல்லும் நான் அதனை பரிசோதனை செய்ய வல்லுநர் கருத்திற்கு அனுப்பினேனா என்றால் இல்லை. டி.கே.கோபால் யாரென்று எனக்கு தெரியாது. எனக்கு வழக்கு சொத்தின் சக்குபந்தி தெரியும். எங்கள் காட்டிற்கு மேற்கே School உள்ளது. கிழக்கே மற்றொரு நபரின் காடு உள்ளது, பெயர் தெரியவில்லை.

தற்போது சாட்சி தெற்கே வடக்கேயில் ஒரு பக்கம் காடும், ஒரு பக்கம் ரோடும் உள்ளதாக சொன்னார், சரியாக திசை தெரியவில்லை என்றும் கூறினார். வழக்கு சொத்தில் அமைந்துள்ள மின் இணைப்புகள் எண்.116, 36 ஆகும். அதில் அமைந்துள்ள வீட்டின் மின் இணைப்பு எண் தெரியாது. ஆனால் வீட்டின் கதவு எண் தெரியும். 2/4-80 ஆகும். தாவா சொத்து இரண்டு சர்வே எண்களில் அமைந்துள்ளது. ஆனால் சர்வே எண்கள் என்ன என்று குறிப்பிட்டு தெரியவில்லை. எந்த சர்வே எண், எந்த திசையில் அமைந்துள்ளது என்ற விவரமும் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ஆதார் அட்டை 28.12.2016 ல் எடுக்கப்பட்டதாகும். இது EXB39 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனது பெயர் மனோஜ் என்பதை நிரூபிக்க ஆரம்ப கல்வி நிலையத்தார் கொடுத்த சான்றுகளை தாக்கல் செய்யவில்லை. எனது பிறப்பு சான்றிதழ் ஈரோட்டில் பதிவாகியுள்ளது நான் மருத்துவமனையில் தான் பிறந்தேன். அதனை நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. எனது பாட்டி உத்தரமணி என்ன சாட்சி சொல்லியிருக்கிறார் என்ற விவரம் தெரியாது. என் அப்பா என்ன பதிலுரை போட்டார் என்ற விவரமும் எனக்கு தெரியாது. என் அப்பா எழுதி கொடுத்த கிரய ஒப்பந்தத்தின்படி மைனர் என்ற முறையில் எனக்காகவும் சேர்ந்து எழுதி கொடுத்த ஒப்பந்தம் செல்லும் என்பதால் நானும் சேர்ந்து கிரயம் எழுதி கொடுக்க வேண்டும் என்று சொன்னால் அது தவறு.
மறுவிசாரணை இல்லை.

/ஒப்பம்/DW6

/ஒப்பம்/திரு.எம்.பாலமுருகன், பி.ஏ, பி.எல்.,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.